**ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் - 2023**

-----------------------------------------------------------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமான கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்களுக்குரிய தகவல்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், என்பவற்றை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.
இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து பல்கலைகழகத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிறுவனத்தின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப் பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் காட்டும் வகையில் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட ஆளுகைத் தரப்பினர்களின் பொறுப்பு**

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பென்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் பல்கலைக்கழகம் தொடர்ந்நியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.
பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, நிருவாக தொடர்புபட்ட தரப்பினர்களினால் வகிக்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16 (1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காள்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக தாக்கம் ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் இல்லையாயினும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாடு தொடர்பான தெளிவொன்றை பெற்றுக்கொண்டேன்.

- பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தால் வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமானதாகவும் உட்சேர்க்கப்பட்டுள்ளது என்றும் மற்றும் வெளிப்படுத்தல்கள் அடங்கிய நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த முன்வைப்பும் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வின் விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிறுவகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிறுவகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிறுவகம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்களை சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

| | உரிய நியமங்களுக்கான தொடர்புகளுடன் இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பல்கலைக்கழகத்தினால் நடாத்துச் செல்லப்படுகின்ற அச்சகத்தினை முறையான அங்கீகாரம் ஒன்றில்லாமல் சுயாதீன வியாபாரம் ஒன்றாக செயற்படுவதற்கும் அதற்காக ரூபா 5,000,000 ஆன கடன் தொகை ஒன்று பல்கலைக்கழகத்தின் மூலம் வழங்குவதற்கும் 2023 மார்ச் 7 ஆம் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபை கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 01 இன் 42, 76 மற்றும் 99 ஆம் பந்திகளுக்கு முரணாக மேற்படி திகதி முதல் மீளாய்வாண்டின் இறுதி வரை ரூபா 18,504,114 ஆன அச்சகத்தின் வருமானம் ரூபா | 2023.03.08 ஆம் திகதி முதல் இப் பல்கலைக்கழகத்தின் ஆளுகை சபையினால் இந்த அச்சகத்தின் நடவடிக்கைகளை சுயநிதி சுயாதீன பிரிவொன்றாக அமைக்கப்பட்டுள்ளது கணக்குகளுக்கு புறம்பாக சுயநிதி சுயாதீன பிரிவொன்றாக பேணிச்செல்லப்படுகின்றன. | மீளாய்வாண்டு அச்சகத்தின் வருமானம் செலவினம் மற்றும் சொத்துக்கள் என்பன நிதிக் கூற்றுகளில் உள்ளடக்கப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | 8,433,158 ஆன அச்சகத்தின் செலவினம் மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு அதன் ரூபா 2,196,774 ஆன இறுதி இருப்பு மற்றும் ரூபா 4,497,914 ஆன கடன்பட்டோர் ஆகியவற்றை பல்கலைக்கழகத்தின் நிதிக் கூற்றுகளில் உள்ளடக்கப்படாமையால் மீளாய்வாண்டின் வருமான செலவினக் கணக்கு மற்றும் நடைமுறை பொறுப்புக்கள் அப்பெறுமதியால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது | | |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் 42 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக் கூற்றுகளில் உருப்படிகளை முன்வைத்தல் மற்றும் வகைப்படுத்துதல் ஒவ்வொரு காலப்பகுதி முதல் அடுத்த காலப்பபுகதி வரை மாற்றமின்றி வைக்கப்பட வேண்டிய போதிலும் ரூபா 2,428,800 ஆன உழைக்கப்பட்ட வருமானம் மீளாய்வாண்டின் போது வைத்தியசாலை வருமானம் வைத்தியசாலை மருத்துவ பரிசோதனை வருமானத்திலும் ரூபா 195,046,194 ஆன கற்பித்தல் / பயிற்சி வருமானம் பாடநெறி வருமானத்தில் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டின் போது இவ்வருமானம் முறையே நானாவித வருமானமாகவும் மறு வைத்தியசாலை வருமானத்தில் கற்பித்தல்/ பயிற்சி வருமானமாக காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | வகைப்படுத்தல் தவறு ஒன்றாக கருதி இப்பெறுமதி ஏனைய பெறுவனவுகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது எதிர்காலத்தில் சீராக்குவதற்கு குறித்துக் கொள்கின்றேன் | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமமங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | இலங்கை பொதுத்துறை கணக்கிட்டு நியமம் 01 இன் 127 ஆம் பந்தியின் பிரகாரம் நிதி நிலைமை கூற்றில் முன்னால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இ.பொ.க. நியமங்களில் தேவைப்படுத்துகின்ற தகவல்களை குறிப்புகள் மூலம் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் ரூபா 9,554,938 ஆன பெறவேண்டிய வருமான வரி மற்றும் | கணக்காய்வு விசாரணையுடன் இணங்கவில்லை. ரூபா 9,554,938 ஆன பெற வேண்டிய வருமான வரி நடைமுறை பொறுப்பின் கீழ் ஐந்தொகையில் காண்பிக்கப்பட்டுள்ள | நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 1,422,624 ஆன ஆண்டின் வருமான வரி தொடர்பாக குறிப்பொன்று நிதிக் கூற்றுகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | துடன் ரூபா 1,422,624 ஆன ஆண்டின் வருமான வரி பெறுமதி வருமான வரியாக வருமான கூற்றில் காண்பிக்கப் பட்டுள்ளது | |
| (ஈ) | வெவ்வேறு மூலங்களிலிருந்து ஆராய்ச்சி மானியங்கள் முன்னைய ஆண்டுகளின் போது தவறுதலான கணக்கீட்டு கொள்கை பின்பற்றப்பட்டு வருமானத்திற்கும் செலவினத்திற்கும் இனங் காணப்பட்டிருந்தது இவ்வாண்டில் கிடைத்த அவ்வாறான மானியங்கள் அவற்றின் தன்மையின் பிரகாரம் ஆராய்ச்சி மானியங்களின் கீழ் பொறுப்பாக இனங்காணப்பட்ட போதும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 03 இன் 47 ஆம் பிரிவின் பிரகாரம் ஆரம்ப மீதிகள் மீண்டும் குறிப்பிடப்பட்டு பின்னோக்கி சீராக செய்யாமை காரணமாக 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ஆராய்ச்சி மானியங்கள் ரூபா 44,178,343 ஆன வரவு மீதி ஒன்று சொத்தாக இனங்காணப்பட்டிரந்தது. மேலும் நிதிக் கூற்றுகளின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் ஆராய்ச்சி மானியங்களாக ரூபா 38,678,752 ஆன வரவு மீது ஒன்று காணப்பட்டதுடன் அட்டவணையின் பிரகாரம் அது ரூபா 25,322,871 ஆக இருந்ததால் ரூபா 64,001,623 ஆன வேறுபாடு ஒன்று காணப்பட்டது | கணக்காய்வு விசாரணையுடன் இணங்குகிறேன். சரியாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் 14 மற்றும் 69 ஆம் பந்திகளுக்கு முரணாக ரூபா 6,489,177 தொகை செலவிடப்பட்டு கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் நூதன சாலையில் காணப்படுகின்ற கூரையின் திருத்தம் 2021 நவம்பர் 11 ஆம் திகதி பூர்த்தி செய்யப்பட்டு இருக்கையில் 2023 திசெம்பர் 31 ஆம் தேதி வரையில் மூலதனமாக்கப்படாமல் நடைமுறை வேலைகளில் உள்ளடக்கப்பட்டிருந்தது. அதன் | கணக்காய்வு விசாரணையுடன் இணங்குகிறேன மேற்கொள்ளப்பட்ட வேலைகளை பூர்த்தி செய்யப்பட்ட வேலைகளுக்கு மாற்றப்படாமையால் ஐந்தொகையில் சொத்துக்களின் வேறுபாடு ஒன்று இடம்பெறாத போதும் உரிய சீராக்கங்கள் மேற்கொள்ள | நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| பிரகாரம் நடப்பாண்டின் கட்டிடங்கள் அப்பெறுமதியால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்ததுடன் ஆண்டின் பெறுமானத் தேய்வு ரூபா 162,229 ஆல் குறைத்து காண்பிக்கப்பட்ட காரணத்தினால் ஆண்டின் பற்றாக்குறை அப்பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | குறித்தக் கொள்ளப்பட்டுள்ளது. | |

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்த ரூபா 162,029 தொகையான முற்பணத்திற்காக பல்கலைக்கழகத்திடம் தகவல் இல்லாமையால் அறவிட முடியாத கடன் மற்றும் ஐயக்கடன் ஒதுக்கீடாக சீராக்குவதற்கு நேர்ந்தது. மேலும் வைத்தியசாலையின் ரூபா 716,578 ஆன கொள்வனவு முற்பணத் தொகை செலவின மீதி ஒன்றாக முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுக்கு உள்ளடக்கப்பட்டமை மற்றும் சம்பள முற்பணம் ரூபா 38,784 ஆன செலவு மீதி ஒன்றாக காண்பிக்கப்பட்டதால் மீளாய்வாண்டின் இறுதியில் சொத்துக்கள் ரூபா 917,391 குறைத்து காண்பிக்கப் பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டின் போது சைட்டம் நிதியத்தில் இருந்து மருத்துவ பீட பரீட்சை நடத்துவதற்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 34,500 மற்றும் தென் மண்டபத்தினால் வழங்கப்பட்டிருந்த ரூபா 127,584 முற்பணம் 2023 திசெம்பர் 31 வரை தீர்வு செய்யப்படாததால் அந்த ரூபா 162,084 ஆன மொத்த மீதி இனங்காணப்பட்டு அறவிட முடியாத கடன் மற்றும் ஐயக் கடன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் முற்பண மீதிகளுக்காக பொது ஒதுக்கீடு ஒன்று மேற்கொள்ளப்பட வில்லை. | முற்பணங்களின் முழுப் பெறுமதியும் கணக்குகளில் உள்ளடக்கப்பட வேண்டும். |
| (ஆ) | முகாமைத்துவ பீடத்தினால் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பௌதீக இருப்பு மீள் மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும் நிறுவனத்தினால் மீளாய்வாண்டின் நிதி கூற்றுக்களைத் தயாரிக்கும் போது ஆண்டின் இறுதியில் இருப்பு பௌதீகரீதியாக மீள்மதிப்பீடு செய்யாமை காரணமாக நிதிக் கூற்றுகளில் உள்ளடக்கப்பட்ட ரூபா 191,595,374 பெறுமதியான இறுதி இருப்பின் நியாயமான | 2023 ஆம் ஆண்டுக்காக வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கை 2024.04.03 அளவில் தயாரிக்கப்பட்டு பாதுகாப்பு அமைச்சுக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் குழுவின் அறிக்கையின் அவதானிப்புகளின் பிரகாரம் பயன்பாட்டுக்கு பொருத்தமற்ற பொருட்கள் மதிப்பீடு செய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள | இருப்பு பெறுமதியை நம்பிக்கையாக உறுதிப்படுத்துவதற்கு இருப்பு மீள் மதிப்பீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தன்மை மற்றும் சரியான தன்மை என்பவற்றை உறுதிப்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | மதிப்பீட்டுக் குழுவின் நடவடிக்கைகளும் இறுதிக்கட்டத்தில் நடைபெற்று வருகின்றது | |
| (இ) | கேட்போர் கூடத்தினை நிர்மாணிப்பதற்காக 2010 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை செலவிடப்பட்ட ரூபா 96,953,827 ஆன தொகை நடைமுறை வேலைகளில் உள்ளடக்கப்படாமல் இருந்தலுடன் பல்கலைக்கழகத்தின் Budget Hotel Hospital பெயரிலான பிரிவின் நிர்மாண நடவடிக்கைகளுக்காக ரூபா 11,506,604 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் நிதி கூற்றுகளில் நடைமுறை வேலையாக ரூபா 10,237,786 மாத்திரம் காண்பிக்கப்பட்டமையால் நடைமுறை வேலைகளின் மொத்த பெறுமதி ரூபா 98,222,645 ஆல் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | 2010 ஆம் ஆண்டு முதல் 2023.12.31 வரை கேட்பார் கூட கட்டிடத்திற்காக செலவிடப்பட்ட அனைத்து செலவினங்களும் கணக்கீடு செய்யப்பட்டுள்ளதால் கணக்காய்வு விசாரணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் கேட்போர் கூடத்தின் செலவினம் ரூபா 96,953,827 ஆன தொகை குறைத்து காண்பிக்கப்பட்டுள்ள அவதானிப்பு அடிப்படை அற்ற கணக்கீட்டின் போது அதனை ஏற்றுக்கொள்ள முடியாததால் அந்த அவதாணிப்பை அகற்றுமாறு கேட்டுக்கொள்கிறேன். Budget Hotel Hospital என்ற பெயரிலான பிரிவிற்காக மீளாய்வாண்டின் போது மூலதனச் செலவினம் ஒன்று அறிக்கையிடப்படாதிருந் ததுடன் செயற் அலுவலகத்திலும் இருந்து உரிய விபரங்களை பெற்றுக் கொண்டதன் பின்னர் ஏதேனும் இருந்தால் உரிய சீராக்கலன்களை செய்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் | நடைமுறை வேலைகளில் அனைத்து செலவினங்களும் உள்ளடக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | தனியார் சிகிச்சைகளுக்குரிய 2023 ஜனவரி 1 ஆம் திகதி காணப்பட்ட ரூபா 2,187,341 ஆன பெறவேண்டிய வருமானம் மீளாய்வாண்டில் அறவிடப்பட்டிருந்த போதும் குறித்த மீதி தொடர்ந்து அறவிடப்பட வேண்டிய வருமானமாக நிதிக்கூற்றுகளில் காண்பிக்கப்பட்ட காரணத்தினால் மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுகளில் பெறவேண்டிய வருமானம் அப்பெறுமானத்தால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டின் போது இந்த பெற வேண்டிய பெறுவனவுகள் கிடைத்துள்ளதுடன் இதனை நிதிக் கூற்றுகளில் எதிர்காலத்தில் சீதாக்கம் செய்யப்படும். | பெற வேண்டிய வருமானம் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும் |
| (உ) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 70,931,247 ஆன மருத்துவ வழங்கள் இருப்பில் உள்ளடக்கப்பட்ட ரூபா 11,349,293 காலாவதியான இருப்புகளுக்குரிய ஒதுக்கீடு கணக்குகளில் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் உரிய மருந்துகளை அகற்றுவதற்கு முகாமைத்துவம், கணக்காய்வு திகதி வரையும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை அதன் காரணமாக பெறுமதியால் கணக்கினுள் இருப்பு கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் பற்றாக்குறை அப்பெறுமதியால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | காலாவதியான மற்றும் தர உறுதிப்படுத்தலில் சித்தி அடையாத மருந்துகளை அகற்று வதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டு அக்குழு அறிக்கை தேசிய மருந்துகள் ஒழுங்கு படுத்தல் அதிகார சபை மற்றும் மருந்துகள் வழங்கல் பிரிவிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இம்மருந்து அகற்றுவதற்கு தொடர்பாக தேவையான ஆலோசனைகளை தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை மற்றும் மருத்துவ வளங்கள் பிரிவிடம் இருந்து பெற வேண்டி உள்ளது. | இருப்பு பெறுமதி சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

**1.5.3 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கை**

| விடயம் | நிதிக்கூற்றுக்களுக்கு இணங்க பெறுமதி | துணை அறிக்கைகளுக்கு இணங்க பெறுமதி | வித்தியாசம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | | |
| ஆராய்ச்சி மானியம் | (38,678,752) | 25,322,871 | 64,001,623 | கணக்காய்வு விசாரணையுடன் இணங்குகிறேன் | நிதிக்கூற்று மீதிகளை துணை அறிக்கைகளுடன் |

| | | | |
|---|---|---|---|
| | | பின்னர் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கிணக்கம் செய்தல் வேண்டும். |

**1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெறவேண்டிய பணம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வியாபார கடன்பட்டோரில் ஓராண்டுக்கு மேற்பட்ட பழைய அறவிடப்படாத கடன்பட்டோர் பெறுமதி ரூபா 359,796,230 ஆக இருந்ததுடன் அம் மீதிக்கான கடன்பட்டோர் காலப்பகுப்பாய்வொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் மாணவர்களிடமிருந்து கிடைத்திருந்த ரூபா 70,650,682 ஆன தொகை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்வு செய்யப்படாது இருந்ததுடன் அம்மீதியில் ஓராண்டுக்கு மேற்பட்ட பழைய மீதிகளின் பெறுமதி ரூபா 40,275,433 ஆக இருந்தது | Sage 300 கணனி மென்பொருள் முறைமை மூலம் கடன்பட்டோர் காலப்பகுப்பாய்வினை 01-30 நாட்கள், 31-60 நாட்கள், 61-364 நாட்கள் மற்றும் 365 இற்கும் மேற்பட்ட நாட்கள் என பெற்றுக் கொள்ளலாம். எனினும் கடன் பட்டோர் காலப்பகுப்பாய்வின் விரிவான அறிக்கை ஒன்றை மூலம் பட்டியல் திகதிக்கு பெற்றுக் கொள்ள முடியும். | கடன் பட்டோர் மீதிகளை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியவுடன் கடன் பட்டோர் மீதிகளுக்காக காலப்பகுப்பாய்வு பேணி செல்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 01 ஆண்டு முதல் 25 ஆண்டு வரை பழமையான ரூபா 99,028,325 ஆன அறவிடப்பட வேண்டிய பிணைமுறி, 06 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 15,439,662 ஆன பெற வேண்டிய பகுதிக் கொடுப்பனவு மற்றும் 01 இற்கும் 9 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட பழைய ரூபா 6,219,490 ஆன சலவையக வருமானம் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடுவதற்கு முடியாமல் இருந்தது. | வழக்கு தொடர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது | இழக்கப்பட்ட வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் 12.2.5 ஆம் பிரிவு | வெற்றிடமாக காணப்படும் பதவி ஒன்றில் கடமை மேவுகை செய்வதற்கு திணைக்களசார் வேலை திட்டம் ஒன்றின் கீழ் மேவுகை அடிப்படையில் உத்தியோகத்தர் ஒருவருக்கு பதில் கடமை சம்பளம் ஒன்று அல்லது எந்த ஒரு மேலதிக ஊதியமும் பெற்றுக்கொள்ள முடியாத போதும் 2022 ஜுன் மாதத்தில் நடைபெற்ற இப் பல்கலைக்கழகத்தின் 644 வது முகாமைத்துவ குழு அங்கீகாரத்தின் பேரில் பல்கலைக்கழகத்தின் நிதியாளர், மினோதா நிறுவனத்தில் கணக்காளர் பதவியில் பதில் கடமை புரிவதற்காக 2022 ஜுலை மாதம் 1 ஆம் திகதி முதல் நியமிக்கப்பட்டிருந்தார். 2022 செப்டம்பர் 13 ஆம் திகதி வரை மெட்ரோ பொலிட்டன் கெம்பஸ் கல்வி நிறுவனத்திற்காக உதவி நிதியாளர் ஒருவராக நியமிக்கப்பட்டிருக்கையில் 2022 ஒக்டோபர் முதல் 2023 ஒக்டோபர் வரை கடமை மேவுகை க்கான படிகளாக செலுத்தப்பட்டுள்ள தொகை ரூபா 452,238 ஆக இருந்தது. | பல்கலைக்கழகத்தின் தகைமைகள் மற்றும் அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு நிதியாளர் உத்தியோகத்தர் மெட்ரோபொலிட்டன் கேம்பஸ் நிறுவனத்தில் பதில் கடமை புரிவதற்காக முகாமைத்துவ சபை அங்கீகாரத்துடன் நியமிக்கப்பட்டார். ஆரம்ப சம்பளத்தில் 25% படிகளாக கொடுப்பனவு செய்வதற்கு அனுமதிக்கப்பட்டது | தாபன விதிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | | | |
| (i) | நிதிப் பிரமாணம் 371(2)(அ) | ஏதேனும் விசேட செயற்பாடொன்றிற்காக பதவிநிலை தர உத்தியோகத்தர்களுக்கு | ஒரு மாதம் அளவில் தொடரந்து நடைபெறும் பரீட்சைகளுக்கு | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் உரிய எல்லைகளுக்கு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மாத்திரம் ஒரு தடைவ ரூபா 100,000 ஆன உயலர் எல்லையில் செயல் நிமித்த கட்டுநிதி வழங்க முடியுமான போதும் பல்கலைக்கழகத்தினால் மீளாய்வாண்டில் 57 சந்தர்ப்பங்களில் அந்த எல்லையை மிகைத்து மொத்தம் ரூபா 15,941,748 ஆன முற்பணம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | உரித்தான செலவை நாம் பரீட்சைகள் நடத்தப்படும் சந்தர்ப்பங்களில் செலவிடுவதற்கு நேர்கின்றது. அத்தியாவசிய செலவினங்களை செலவிடுவதற்கு அதற்காக முன்னர் திட்டமிட்டு மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பாதீட்டின் பிரகாரம் ரூபா 100,000 விட கூடுதலான பெறுமதியை செயல் நிமிர்த்த கட்டுநிதி வழங்க நேர்கின்றது. | உட்பட்டு செயல் நிமித்த கட்டு நிதி வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | நிதிப் பிரமாணம் 371(6) | வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அதன் அறிக்கை ஜூன் 15 இற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டிய போதிலும் 2023 ஆம் ஆண்டின் பல்கலைக்கழகத்தின் வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கை அத்திகதியில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை | பொருள் மெய்மையாய்வு அறிக்கை 2024.04.03 திகதி அமைச்சுக்கு கையளிக்கப்பட்டுள்ளது கைதவிக்கும் குழுவின் நடவடிக்கைகளும் இறுதிக்கட்டத்தில் காணப்படுவதால் விரைவில் உரிய அறிக்கையை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | நிதி பிரமாணங்களின் பிரகாரம் நிர்ணயிக்கப்பட்ட திகதியில் பொருள் மெய்மையாய்வு அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (iii) | நிதிப் பிரமாணம் 880 மற்றும் 891 | நிறுவனத்தின் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்களை இனங் கண்டு பிணை வைப்பு பதிவேடு ஒன்று பேணி செல்லப்பட வேண்டிய போதிலும் நிறுவனத்தினால் பிணை வைப்பு பதிவேடு பேணப்படவில்லை என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது | சிறப்பர் இடமிருந்து ரூபா 5,000 பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதுடன் அப்பெறுமதியை மீண்டும் செலுத்த வேண்டிய பெறுமதியாக நிதிக் கூற்றுகளில் காண்பிக்கப்பட்டுள்ளது | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (இ) | 1982 இன் 4 ஆம் இலக்க நகர | வேறு ஏதேனும் சட்ட ஏற்பாடுகள் எவ்வாறு இருந்தாலும் ஏதேனும் | பல்கலைக்கழகத்தின் மருத்துவ மாணவர்கள் மாணவ | சட்டத்தின் பிரகாரம் அனுமதி |

| | | | | |
|---|---|---|---|---|
| | அபிவிருத்தி அதிகார சபை (திருத்த) சட்டத்தின் 8 ஐ (1) ஆம் பிரிவு | அபிவிருத்தி பிரதேசம் ஒன்று அல்லது பகுதி ஒன்று ஏதேனும் அபிவிருத்தி நடவடிக்கைகளை செய்தால் அல்லது அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபடுதல் அரசாங்கத்தின் முகவர் ஒருவர் உட்பட எவரேனும் நபர் ஒருவரால் அதிகாரசபையால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திர அதிகாரத்தின் கீழ் தவிர மேற்கொள்ள முடியாத போதும் நிறுவனத்தினால் கேட்போர் கூட கட்டிட நிர்மாணத்திற்குரிய அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உத்தியோகத்தர்களுக் காக மருத்துவ பீடமொன்றை நிர்மாணிப்பதற்கு 2010 ஆம் ஆண்டில் அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது. அம் மருத்துவ இடத்துக்கு இணைக்கப்பட்டு கேட்போர் கூடம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது கேட்போர் கூட கட்டிடத்தின் நிர்மாண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | பத்திரம் ஒன்று பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஈ) | 2021 ஆம் ஆண்டின் பொது முயற்சிகளுக் காக் வழங்கப்பட்ட செயற்பாட்டு கைநூலின் 07 ஆம் அத்தியாயத்தின் 7.1 முதல் 7.6 வரையான பிரிவுகள் | ஆரம்ப செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு செயல் நடவடிக்கை திட்டத்தில் உள்ளவரான செயலாற்றல் ஒன்று கால ரீதியாக மேற்கொள்ளப்பட்டு வருடாந்த செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் பல்கலைக்கழகத்தால் அவ்வாறான செயலாற்றல் அறிக்கையொன்ற தயாரிக்கப்பட்டுள்ளதாக உறுதிப்படுத்தப்படவில்லை. | செயலாற்றல் அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. பிரதிகள் இதனுடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன | செயற்பாட்டு கைநூலின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 4,694,782,267 ஆன பற்றாக்குறையாகஇருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 176,289,055 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 4,871,071,322 ஆன வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு அரசாங்கத்தின் மீண்டெழும் மானியம் ரூபா 1,974,334,000 ஆலும் வட்டி வருமானம் ரூபா 451,438,501 ஆல் குறைவடைந்தமையும் மின்சார செலவினம் ரூபா 342,810,087 ஆல் அதிகரித்தமையும் பிரதான காணங்களாக இருந்தன.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களின் போக்கு பகுப்பாய்வு

(அ) மீளாய்வாண்டிற்கான மொத்த வருமானம் முன்னைய ஆண்டிற்குக் ஒப்பாக 11.67 சதவீதத்தினால் அதாவது ரூபா 1,342,272,233 ஆல் வீழ்ச்சியடைந்திருந்ததுடன்அதற்காக அந்நியச் செலாவணியில் பேணிச் செல்லப்பட்டிருந்த நிலையான வைப்புக்கள் மூடப்பட்டமை காரணமாக வட்டி வருமானமொன்று குறைவடைந்தமை காரணமாக

இருந்தது. எனினும்  முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் வைத்தியசாலை வருமானம் 34 சதவீதத்தினாலும் பாடநெறி வருமானம் 7 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான மொத்த செலவுகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 23 சதவீதத்தால் அதாவது ரூபா 1,601,268,444 ஆல் அதிகரித்திருந்ததுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் வழங்கலுக்கான செலவினம் மற்றும் உடன்படிக்கை சேவைகள் செலவினம் அதிகரித்தமை  இதற்கு காரணங்காக இருந்ததுடன் அந்த அதிகரிப்பு முறையே 76 மற்றும் 60. சதவீதமாகும். வழங்கல் செலவுகளுக்கு இடையே எழுதுகருவிகள் செலவுகள் 182  சதவீத்ததால் அதாவது ரூபா 76,189,029  ஆலும் எரிபொருள் மற்றும் உராய்வு நீக்கிகள் செலவினம் 83 சதவீத்தால்  அதாவது ரூபா 106,526,588 ஆலும் சீருடை மற்றும் ஆடைச் செலவினம் 115 சதவீத்தால்  அதாவது ரூபா 25,503,667 ஆலும் உடன்படிக்கை சேவை செலவினங்களுக்கு இடையே மின்சார செலவினம் 82 சதவீதத்தால் அதாவது ரூபா 342,810,087 ஆலும் இணைச் சேவை செலவினம்  187 சதவீத்தால் அதாவது ரூபா 30,447,215 ஆலும் உத்தியோகபூர்வ உபசரிப்பு செலவினம்  65  சதவீத்தினால் அதாவது ரூபா 19,731,693 மற்றும் செயலமர்வு செலவினம் 243 சதவீத்தினால் ரூபா 4,520,193 இனாலும் அதிகரித்திருந்தது.

### 2.3 விகிதாசார பகுப்பாய்வு

(அ) முன்னைய ஆண்டில் 0.66 சதவீதமான உரிமை மூலதனம் மீதான பிரதிபலன் விகிதம் மீளாய்வாண்டின் போது (-10.99) சதவீதம் வரை குறைவடைந்திருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டில் 2.7:1 ஆன நடைமுறை விகிதம் மீளாய்வாண்டின் போது 0.93:1 வரை வீழ்ச்சியடைந்திருந்தது.

(இ) முன்னைய ஆண்டின் போது உரிமை மூலதனம் மீதான கடன் விகிதம் 0.76:1 ஆக இருந்ததுடன் மிளாய்வாண்டின் போது அது 0.72:1 வரை சிறிய குறைவொன்று ஏற்பட்டு இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் வைத்தியசாலையின் மின்சார பட்டியலை உரிய காலத்தில் செலுத்துவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்காமை காணரமாக பட்டியல் கொடுப்பனவு தாமத கட்டணங்களாக ரூபா 12,128,284 தொகை தண்டப் பணமாக செலுத்த வேண்டியிருந்தது. | மின்பட்டியல் மீது மிகை அறவீடொன்று கொடுப்பதற்கு திறைசேரியிடம் கோரிக்கை விடுத்த திரவ நிதி உரிய காலத்தில் கிடைக்காமல் போனமை காரணமாக இருந்ததுடன் மின்சார பட்டியல் இரு மடங்கினால் அதிகரித்தமை மிகை அறவீட்டு சதவீதம் 0.75% முதல் 1.5% வரை அதிகரித்தமையும் மேற்படி மிகை அறவீடு ஏற்படுவதற்கு காரணமாக இருந்தது. | மின்சாரப் பட்டியல்களை தாமதமின்றி தீர்த்துவைப்பதன் மூலம் நிறுவனத்திற்கு ஏற்படும் நட்டத்தை குறைத்துக் கொள்ளுதல் வேண்டும். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தக்ஷின மண்டபத்தின் 41 உட்பட 761 முழு மாணவர்களின் மற்றும் நிர்வாக கல்வி மற்றும் வதிவிட நடவடிக்கைகளுக்கான மின்சார செலவினமாக ரூபா 56,072,219 தொகை மீளாய்வாண்டில் செலவிடப்பட்டிருந்ததுடன் அதனை குறைப்பதற்கு அல்லது கட்டுப்படுத்துவதற்காக பிரதேசத்திற்கு பொருத்தமான மாற்று மின்சக்தி முறை ஒன்றுடன் தொடர்புபடாத இருந்தமை அவதானிக்கப்பட்டது. | தென் மண்டபத்தின் இட அமைவை பயன்படுத்துவதற்கும் இங்கு சூரிய சக்தி செயற் திட்டத்தின் மூலம் 3 MW இயலளவில் மின்சாரத்தை பிறப்பிப்பதற்கு இயலுமை உள்ளதுடன் அந்த இயலளவினை தேசிய மின்சக்தி முறைமைக்கு அனுப்புவதற்கும் இயலுமை உள்ளது. இந்த சூரிய மின்சக்தியை செயற்திட்டத்திற்காக சாத்தியவள ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது டன் தற்போது பொருத்தமான முதலீடு ஒன்றை ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. | மின்சார செலவினத்தை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஆ) | 2023 ஜனவரி மாதம் முதல் மெட்ரோபொலிட்டன் கெம்பஸ் கல்வி நிறுவனத்தின் முதலாவது மாடி உலக உணவு நிகழ்ச்சிதிட்டத்தின் ஒத்துழைப்பு செயலக அலுவலத்திற்காக வழங்கப்பட்டிருந்தது இதற்காக எவ்வித வாடகை வருமானம் கிடைக்காமல் இருந்ததுடன் அவ்வளவிற்குரிய மின்சாரம், நீர் வீத வரி பாதுகாப்பு, துப்பரவு போன்ற பொது செலவினங்கள் தொடர்பில் நிறுவனங்களுக்கு இடையே விகிதசாரப்படி பகிர்ந்து கொள்வதற்குரிய எழுத்து மூல உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | உங்களது அவதானிப்புடன் இணங்குகின்றேன். முதலாவது மாடியை பயன்படுத்தும் உலக உணவு செயற்திட்ட அலுவலகம் (ஜனாதிபதி அலுவலகம்) உடன் உடன்படிக்கை செய்வதற்கு தேவையான எதிர்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | விரைவில் முறைப்படுத்துவதற்கும் நியாயமான நிபந்தனைகளுடன் உடன்படிக்கை செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (இ) | 2021 ஏப்ரல் 20 ஆம் திகதிய அமப/21/0584/303/052 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் மிலோதா நிதி நிறுவனத்தை | 2022 மே 26 ஆம் திகதி இப்பல்கலைக்கழகம் எழுத்து மூலம் முகாமைத்துவ சேவைகள் | விரைவில் பதவியணிக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் |

| | | | |
|---|---|---|---|
| | பல்கலைக்கழகத்திற்கு கையேற்கும் போது பொருத்தமான பதவியணியைத் தீர்மானிப்பதற்கும் அந்தப் பதவியஅணிக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதும் 2023 ஒக்டோபர் 10 ஆம் திகதி வரையிலும் அந்த அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை | திணைக்களத்திடம் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்காக பாதுகாப்பு அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டது கோரப்பட்ட பதவியணிக்காக நிரந்தர அடிப்படையில் அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்கு 2023 ஒக்டோபர் 23 ஆம் திகதிய கடிதத்தில் மீண்டும் ஒருமுறை முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. | அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஈ) | பல்கலைக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் பிரகாரம் 103 பேர் முகாமைத்வ உதவியாளர் பதவிக்காக ஆட்சேர்ப்பு செய்யப்பட வேண்டிய போதிலும் பதில் பதிவாளரால் கொ/ஆவி/பா/பொது/36 மற்றும் 2024 ஜூன் 18 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் வழங்கப்பட்டிருந்த தகவல்களின் பிரகாரம் முகாமைத்துவ உதவியாளர்களுக்காக நிரந்தர சேவையில் 101 பேர் மற்றும் ஒப்பந்த அடிப்படையில் 38 பேர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்ததுடன் இவ்வாறு 139 பேர் ஆட்சேர்ப்பு செய்த காரணத்தினால் 36 பேர் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினை மிகைத்து ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தனர். | 04/2019 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கையின் படி, கல்விசார் பணியாளர்களுக்கும் உதவிப் பணியாளர்களுக்கும் இடையிலான விகிதம் குறைந்தபட்சம் 1:2 அல்லது 1:1 ஆக பராமரிக்கப்பட வேண்டும். வளர்ச்சியுடன் அண்மித்ததாக புதிய துறைகள்/ நிறுவனங்கள் ஒரு பாதுகாப்பு பல்கலைக்கழகமாக அவ்வப்போது வெளியிடப்படும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கைகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். அந்தப் பிரிவுகளுக்குத் தேவையான குறைந்தபட்ச ஊழியர்களைப் பராமரிக்க தற்காலிக | அனைத்து ஆட்சேர்ப்பு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் பிரகாரம் சேர்க்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அடிப்படையில் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டது. | |
| (உ) | கெஸ்பேவ பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான 21.5815 ஹெக்டேயர் அளவான காணியில் பல்கலைக்கழகத்தின் போதனா வைத்தியசாலை ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. அக்காணியில் நிர்மாணிக்கப்பட்ட போதனா வைத்தியசாலையின் கட்டிடங்களின் பெறுமதி ரூபா 45,385,484,229 ஆக இருந்ததுடன் நிலத்தை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 1,216,884,293 கிரயமும் மேற்கொள்ளப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியளவில் நிர்மாணங்கள் முடிவடைந்து 07 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்தும் உரிய காணியை கையேற்கும் செயற்பாடு முடிவடைந்திருக்கவில்லை. | பொது திறைசேரியின் கீழ் அமைக்கப்பட்ட செயலற்ற நிலைமை யில் காணப்படும் வரையறுக்கப்பட்ட பொரவிடன்ட் புரொபட்டி லங்கா கம்பனிக்குச் சொந்தமான காணிப்பகுதியை பொது திறைசேரியிடமிருந்து வழங்கப்படும் தீர்மானத்தின் பிரகாரம் காணி அமைச்சிடமிருந்து உடமையாளர்களுக்கு கையேற்று எதிர்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு உள்ளதாக | விரைவில் காணியை கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஊ) | 1988 இன் 27 மற்றும் 2007 இன் 50 ஆம் இலக்க சட்டங்கள் மூலம் திருத்தப்பட்ட 1981 இன் 68 இலக்க ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல அரச பாதுகாப்பு பயிற்சி நிறுவன சட்டத்தின் பிரகாரம் 2011 ஆம் ஆண்டு முதல் கெடட் உத்தியோகத்தர்கள் அல்லது அரச உத்தியோகத்தர்கள் அல்லாத உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மாணவர்களுக்கு பணக் கொடுப்பனவு அடிப்படையில் பட்டங்களை வழங்குதல் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. மேலும் 2018 மார்ச் 21 ஆம் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் தொடர்பான செயற்குழுவின் போது மாணவர்களை அனுமதித்தல் மற்றும் நிர்வாக சபையின் தீர்மானத்தின் செல்லுபடி போன்ற விடயங்களை மேவுகை செய்யும் வகையில் பல்கலைக்கழகத்திற்கு பொருத்தமான உரிய சட்டங்களில் திருத்தங்களை செய்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டிருந்த | சட்ட வரையுனரால் இறுதி வரைவு 2024.06.25 ஆம் திகதி இப்பல்கலைக்கழகத்திற்கு பிரதியுடன் பாதுகாப்பு அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டது மேற்படி இறுதி வரைவிற்காக சட்டமா அதிபரின் இடமிருந்து சட்டபூர்வதன்மை தொடர்பான சான்றிதழை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பாதுகாப்பு அமைச்சிடமிருந்து 2024.06.27ஆம் திகதி வேண்டுகோள் விடுக்கப்பட்டது | விரைவில் சட்டங்களை திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | போதும் மீனாய்வாண்டிலும் சட்ட திருத்த செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டு இருக்கவில்லை. | | |
| (எ) | 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளின் போது கொள்வனவுக்காக Pneumatic Tourniquet Pump System, Traumatology Instrument, PMGS Accessories மற்றும் Endoscopy For Medicine ரூபா 48,834,173 முற்பணமாக செலுத்தப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் தரப் பரிசோதனை சித்தி அடையாமை காரணமாக கணக்குகள் தீர்வு செய்யப்படாமல் காணப்பட்டதுடன் 3 இற்கும் 5 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலம் கடந்திருந்த போதும் அந்நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | KDU/PRO/CAP/1353/2017 ஆம் உருப்படிகள் பல்கலைக்கழகத்தின் வைத்தியசாலைக்கு கிடைத்திருந்ததுடன் அவற்றை பேரேட்டில் உள்ளடக்கப்பட்டிருந்த போதும் தரப் பரிசோதனையில் சித்தியடையவில்லை இது தொடர்பாக வழங்கினருக்கு முன்னரும் அறிவிக்கப்பட்ட போதும் வழங்குனரால் இதற்காக எவ்வித நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்பட்டு இருக்கவில்லை. ஆதலால் இந்த உருப்படிக்கான கொடுப்பனவு நடவடிக்கைகளுக்காக சமர்ப்பிக்கப்பட முடியாது உள்ளது. | விரைவில் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஏ) | பல்கலைக்கழகத்தின் வைத்தியசாலை மற்றும் தென் சபையின் 2015 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை கொள்வனவு முற்பணம் மற்றும் பண முற்பணம் முறையே ரூபா 361,404,619 மற்றும் ரூபா 4,897,892 தொகை 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை மேலும் தென் சபை 2023 ஆம் ஆண்டின் ஜனவரி மாதம் முதல் செப்டம்பர் 22 ஆம் திகதி வரை 22 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த மொத்தம் 895,000 ஆன முற்பணங்களை 14 நாட்கள் முதல் 117 நாட்களுக்கு இடைப்பட்ட தாமதத்துடன் தீர்வு செய்யப்பட்டு இருந்தது. | சிரேஷ்ட விரிவுரையாளர்களால் பெற்றுக் கொள்ளப்பட்ட இம்முற்பணம் அவர்களின் செயற்பாடுகள் பணிகள் அதிகம் மற்றும் பட்டியல் மற்றும் பொருட்கள் கொள்வனவு மற்றும் உரிய சேவைகளை பெற்றுக் கொள்ளும்போது பிரதேசத்துக்கு தாக்கமளிக்கும் சிக்கல்கள் காரணமாக தீர்வு தாமதித்துள்ளது. மேலும் முற்பண சேமிப்பு வங்கியில் வைப்புச் செய்யும் போது ஏற்பட்ட நடைமுறை சிக்கல்களும் முற்பணத் தீர்வு தாமதத்திற்கு காரணமாக இருந்தது மேலும் தீர்வு | விரைவில் முற்பணங்களைத் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | |
|---|---|---|
| | செய்யப்பட வேண்டிய முற்பண நபர்கள் தொடர்பாக எதிர்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்படும். | |

### 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மெட்ரோபொலிட்டன் கெம்பஸ் 2023 ஆம் ஆண்டு ஜனவரி முதல் செப்டம்பர் வரை 56 பாடநெறிகளை திட்டமிட்டிருந்த போதும் அதில் 12 பாடநெறிகள் மாத்திரம் நடத்தப்பட்டிருந்ததுடன் வேண்டுகோள் இல்லாததன் அடிப்படையில் 44 பாடநெறிகள் நடத்தப்பட்டு இருக்கவில்லை. நடத்தப்பட்ட 12 பாடநெற்களுக்கு இடையே 11 பாடநெறிகளுக்காக திட்டமிடப்பட்ட மாணவர்கள் எண்ணிக்கை பங்கு பற்றாதிந்ததுடன் அது 20 சதவீதம் முதல் 50 சதவீதத்திற்கு இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டன. | பொருளாதார சிக்கல்கள் நிலைமையின் பேரில் அரசு நிறுவனங்களில் ஊழியர்கள் பயிற்சி அளிக்கும் நிகழ்ச்சிகளுக்காக சமூகமளித்தல் போக்கு குறைந்த மட்டத்தில் உள்ளது. எதிர்காலத்தில் வளங்களை செயற்திறனாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கேள்விகள் காணப்படும் புதிய பாடநெறிகளை உள்ளடக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

### 3.4 பயன்படுத்தப்படாத அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) தென் சபை மற்றும் பல்கலைக்கழக வைத்தியசாலையால் கொள்வனவு செய்யப்பட்டிருந்த 57 வெவ்வேறு உருப்படிகளுக்குரிய 443,695 இருப்பு அலகுகள் 2018 ஆம் ஆண்டு முதல் விளைவற்று காணப்பட்டதுடன் அதில் ரூபா 79,612,689 பெறுமதியான இருப்பு உருப்படிகள் வைத்தியசாலைக்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த உத்தரவாத காலம் மிகைத்த மருத்துவ உபகரணங்களின் பெறுமதி ரூபா 76,825,839 ஆக இருந்தது. | கம்பி இருப்பினை குறுகிய காலத்தில் நிர்மாணங்களுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள புதிய கட்டிட நிர்மாணத்திற்காக பயன்படுத்துவதற்கு களஞ்சியப்பத்தப்பட்டுள்ளது. கோட்டின் பைல் லேஸ் மிகை இருப்பு காணப்பட்டமை காரணமாக கொ.பா.க இரத்மலான இடமிருந்து ஆலோசனைகள் கோரப்பட்டுள்ளன. மருத்துவ உபகரணங்களை | வழங்கப்படுகின்ற மருத்துவ உபகரணங்களை செயற் திறனாக பயன்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | நோயாளிகளின் பயன்பாட்டுக்காக எதிர்காலத்தில் தேவைப்படும் போது வழங்கப்பட உள்ளது. | |
| (ஆ) | மெட்ரோபொலிட்டன் கெம்பஸ் கல்வி நிறுவனத்தின் கட்டிடத்தில் 11,074 சதுர அடி வீதம் ஆன 05 மாடிகள் மற்றும் 10,104 சதுர அடிகளான ஆறு மாடிகளுடன் கூடியதாக உள்ளதுடன் இந்த மாடிகளில் காணப்படும் 875 இருக்கை இயலளவு விரிவுரைகளுக்காக பயன்படுத்தக் கூடிய 07 மண்டபங்கள் காணப்பட்ட போதும் அதிகளவிலான மண்டபங்கள் அதிக காலப்பகுதிகளாக குறைப் பயன்பாடுடன் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | சொத்துக்களை பயன்படுத்துதல் குறைவுக்கு காரணம் பாடநெறிகளுக்கான அரச ஊழியர்கள் பங்கு பற்றாமையால் தற்போது எமது நிறுவனத்தின் உள்ள சொத்துக்களை தனியாத்துறைக்கு வழங்கி வருமானம் உழைப்பதற்கும் எமது நிறுவனத்தின் அனைத்து மாடிகளில் காணப்படும் வசதிகளை இணையதளம், முகப் புத்தகம், பிரசுரங்கள் மற்றும் கைநூல்கள் போன்ற சந்தைப்படுத்தல் வழிகள் ஊடாக மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | விரவுரை மண்டபங்களை முழுமையாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2018 ஆம் ஆண்டின் போது வைத்தியசாலையின் ஆய்வுகூட பரிசோதனைப் பொருட்கள் மற்றும் அறிக்கைகளை எடுத்துச் செல்லும் குறிக்கோளில் ரூபா 96,846,900 (ஐ.அ.டொ 530,000) செலவு செய்து 56 துறைகளை (Stations) தொடர்புபடுத்தி வாயு குழாய் முறைமை (Pneumatic Tube System) ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. எனினும் அதில் 52 பிரிவுகளுக்காக மாத்திரம் மீளாய்வாண்டில் பிரயாணம் செய்யப்பட்டிருந்தது. அதில் 100 இனை விட குறைவாக மேற்கொள்ளப்பட்ட 25 துறைகள் காணப்பட்டதுடன் அதன் பிரகாரம் குறைப்பயன்பாட்டு பிரிவுகள் அளவு 44 சதவீதமாக இருந்தது. | பல்கலைக்கழக வைத்தியசாலையின் 56 வாயு குழாய் முறைமை துறைகள் தாபிக்கப்பட்டிருந்ததுடன் வைத்தியசாலைமுழு இயலளவுடன் செயற்படாமையால் சில இடங்களில் உள்ள பிரிவுகள் பயன்படுத்தாமை வாயு குழாய் முறைமையின் குறைப்பயன்பாட்டிற்கு காரணமாகும். மேலும் 2022 ஆம் ஆண்டில் முறைமை ஊடாக 66004 போக்குவரத்து செய்யப்பட்டுள்ளதுடன் 2023 ஆம் ஆண்டிற்காக 70217 போக்குவரத்து செய்யப்பட்டுள்ளது. | வாயு குழாய் முறைமை உயர் இயலளவுடன் வைத்தியசாலை செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஈ) மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் வைத்தியசாலையில் 5A, 7A மற்றும் 7B வார்ட்கள் மற்றும் அதி தீவிர சிகிச்சை பிரிவு 02, 03 மற்றும் 04 ஆம் பிரிவுகளில் 2022 மே மாதம் முதல் மீளாய்வாண்டின் இறுதி வரையில் பயன்பாடு இன்றி காணப்பட்டதுடன் அதில் காணப்பட்ட ரூபா 210,190,808 பெறுமதியான மருத்துவ உபகரணங்கள் விளைவற்று காணப்பட்டன. | 7-A வாட் · இரண்டாவது மருத்துவ வார்டாக திறப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதுடன் வாரட் இலக்கம் 7-B தனியார் துறையின் வார்ட் ஒன்றாகும். அது வார்ட் இலக்கம் 09B மற்றும் 9A தனியார் இயலளவு மிகைக்கும் சந்தர்ப்பத்தில் நோயாளி அனுமதித்தல் இடம்பெறுவதுடன் தற்போது காணப்படும் அதிக ஊழியர் பற்றாக்குறையை சரியாக முகாமை செய்வதற்கு அவசியம் உள்ளதால் இலக்கம் 8 B மற்றும் 9B உயர் இயலளவில் பயன்படுத்தப்படுகின்றது. மேலும் அதி தீவிர சிகிச்சை பிரிவு 2 தற்போது ஆரம்பிக்கப்பட்ட இருதய தோல் பிரிவாக பயன்படுத்துவதற்கு உள்ளதுடன் அப்பிரிவை ஆரம்பிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதன் பின்னர் அதி தீவிர சிகிச்சை பிரிவு 02 இற்கான அந்த உபகரணங்களை வழங்க நடவடிக்கை எடுக்க எடுப்பேன். | வாட்களை முழுமையான இயலளவுடன் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

**3.5 செயற்திட்ட அல்லது மூலதன வேலை தாமதங்கள்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 2023 பெப்ரவரி 24 ஆந் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்வதற்கிருந்த வைத்தியசாலை முகாமைத்துவ தகவல் முறைமைக்காக 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 215,240,527 செலவிடப்பட்டிருந்தது. அது 2 சந்தர்ப்பங்களில் காலநீடிப்பு செய்யப்பட்ட பின்னர் இச்செயற்திட்ம் 2024 மே 28 ஆந் | அவதானித்த விடயத்துடன் இணங்குகின்றேன். | திட்டமிடப்பட்டவாறு முறைமையை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

திகதி அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் 2024 ஜுன 11 ஆந் திகதி வரை இந்த செயற்திட்டத்தின் முன்னேற்றம் 68.5 சதவீதமான அளவில் காணப்பட்டது.

## 3.6 பெறுகை முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பெறுகை வழிகாட்டல் கோவையின் 8.9.1 பிரிவின் பிரகாரம் முறையான பொறுப்பேற்றால் கடிதம் வழங்கிய உடனே ரூபா 500,000 மிகைக்கும் பொருட்கள் அல்லது சேவைகள் ஒப்பந்தங்களுக்காக முறையான ஒப்பந்த உடன்படிக்கை ஒன்று எழுதி கையொப்பமிட வேண்டிய போதிலும் தென் சபையின் தெளிவு கணக்காயின் போது ரூபா 500,000 மிகைத்த ரூபா 20,728,998 கூட்டுப் பெறுமதியான 27 பெறுகைகள் பெறுகை கோவையில் ஒப்பந்த உடன்படிக்கை உள்ளடக்கப்படாதிருந்தவுடன் கேள்வி ஆவணங்களிலும் அதற்காக பிரிவொன்று உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை | இதனை சரி செய் பெறுகை வழிகாட்டல் கோவை 8.9.1 இற்குரிய ரூபா 500,000 மிகைக்கும் பொருட்கள் மற்றும் சேவைகளை கொள்வனவு செய்வதற்காக தகைமையுடைய வழங்குனர்களுடன் உடன்படிக்கை செய்வதற்கு தற்போது நடவடிக்கை எடுத்து வருவதாக | பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஆ) | தென் சபையின் நிர்மாணிக்கப்பட்டு வரும் பேரவை வீடு மற்றும் கெடட் உத்தியோகத்தர் வீட்டிற்காக தேவையான மூலப்பொருட்கள் பல சந்தர்ப்பங்களில் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது அதன் பிரகாரம் மண்டப வீட்டிற்க்காக தேவையான மரங்களிற்காக ரூபா 3,980,725 மற்றும் சுடெட் உத்தியோகத்தர் வீட்டிற்கு உருக்கு கம்பி கொள்வனவிற்காக ரூபா 6,222,018 செலவிடப்பட்டிருந்ததுடன் இக் கொள்வனவு முறையே 07 சந்தர்ப்பங்களிலும் 08 சந்தர்ப்பங்களிலும் | பெறுகை வழிகாட்டல் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட பெரும்பாலான பெறுகைகள், பெறுகை வழிகாட்டல் கோவையின் 3.4 இன் கீழ் (shopping) மேற்கொள்ளும் இடம்பெறும் காலம் அதிகமாக இருப்பதால் செயற்திட்ட வேலைகள் பூர்த்தி செய்து திறப்பதற்கு இருந்த காலஎல்லைக்குள் மேற்கொள்வதற்கு முடியாமை அடிப்படையில் பல | பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொள்ளப்பட்டிருந்தன. மேலும் கடெட் உத்தியோகத்தர் வீட்டிற்காக ரூபா 2,124,000 பெறுமதியான 24 கட்டில்கள் மூன்று சந்தர்ப்பங்களில் ஒரே வழங்குனரிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட சந்தர்ப்பங்களில் திரட்டிய கொள்ளளவுக்காக பெற்றுக் கொள்ளக்கூடிய இந்த விலை நன்மை இல்லாமல் போயிருந்தது. | கட்டங்களில் கொள்வனவு மேற்கொள்ளப்பட்டது இந்த உருப்படிகள் ஒவ்வொன்றும் ஒன்றுக்கொன்று வேறுபட்ட உருப்படியாக இருப்பதால் இக்கோவைகளில் ஒரே உருப்படி மீண்டும் கோரப்படவில்லை தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்காக மேலதிக செலவினம் ஒன்று மேற்கொள்ள நேரவுமில்லை. | |
| (இ) | பெறுகை வழிகாட்டல் கோவையின் 5.6 பிரிவின் பிரகாரம் தெளிவான விதந்துரைகள் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான விதந்துறைகள் தயாரிக்கப்படாமல் கூறுவிலைகள் பெற்றுக் கொள்ளப்பட்டு தென் சபையில் கிருமி ஒழிப்பிற்காக இரசாயன பொருட்கள் மற்றும் மெட்ரோபொலிட்டன் கெம்பஸ் நிறுவனத்திற்காக கேள்வி பார்வை முறைமை (Audio Visual System) ஒன்றை கொள்வனவு செய்யும் போது முறையே ரூபா 907,280 மற்றும் ரூபா 934,000 செலவிடப்பட்டு இருந்தது. மேலும் கேட்டல் பார்வை முறைமை கொள்வனவின் போது பெறுகை வழிகாட்டல் கோவையின் 8.9.1 இன் பிரகாரம் முறையான ஒப்பந்த உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. | கிருமி ஒழிப்பிற்குரிய கேள்வி கோரும் போது சதுர அடி அடிப்படையில் கேள்வி கோரப்பட்டதுடன் கேள்விதாரர்கள் இடப்பரிசோதனை ஒன்று மேற்கொள்ளாமல் சதுர அடி அடிப்படையில் கேள்வி கோரல் பத்திரங்கள் நிரப்பப்பட்டுள்ளது. மெட்ரோபொலிட்டன் கெம்பஸ் (உத்தரவாத) கம்பெனி லிமிடெட் நிறுவனத்தின் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் சந்தர்ப்பத்தில் இடம்பெற்றிருந்த அங்கீகரிக்கப்பட்டவுடன் அவ்வாறு அங்கீகரிக்கப்பட்ட விண்ணப்பத்தின் பிரகாரம் கேள்வி ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு வழங்குனருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | தொழில்நுட்ப பீடத்திற்காக 03 டெஸ்க்டொப் கணனிகள் கொள்வனின் போது அதற்காக நான்கு முறை விலை கூறல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.<br>இதற்காக 1 ½ வருட காலம் கடந்தமையால் தாமதம் ஏற்பட்டிருந்ததுடன் அக்கால தாமதத்தால் அவற்றின் விலைகள் வேறுபட்டதன் அடிப்படையில் ரூபாய் 827,100 கூடுதலாக கொடுப்பனவு செய்ய நேர்ந்தது. பெறுகை வழிகாட்டி கோவை 4.2.2 பிரிவின் பிரகாரம் பெறுகை கால அட்டவணை ஒன்று தயாரிக்காமை இதற்கான காரணங்களாக இருந்ததுடன் பெறுகை வழிகாட்டி கோவையின் 4.3.3 பிரிவின் பிரகாரம் அசாதாரண காலம் எடுத்தமை விலை விபரங்களை கருத்தில் கொண்டு மொத்த கிரய மதிப்பீடு நாளது வரையாக்கப்பட்டிருக்க வில்லை. மேலும் பெறுகை வழிகாட்டி கோவையின் 5.3.10 பிரிவின் பிரகாரம் கேள்வியின் செல்லுபடி காலம் கூடியது 49 நாட்களாக இருக்க வேண்டிய போதிலும் அதற்காக 120 நாட்கள் குறிப்பிடப்பட்டிருந்தது. | இணங்குகின்றேன். கோவையின் 4.2.2 பிரகாரம் பெறுகை கால அட்டவணை ஒன்று தயாரிக்கப்படாதிருந்ததுடன் அதற்கு தொடர்புடைய அனைத்து பொறுப்பான பிரிவுகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளன. பெறுகை வழிகாட்டி கோவையில் 4.3.3 இன் பிரகாரம் மதிப்பீட்டு கிரயம் நாளதுவரையாக்கப்பட வேண்டும். எனினும் இந்நிறுவனத்தின் மதிப்பீட்டு பெறுமதி விலை கோரல் நடைமுறை தெரிவு செய்யும்போது மாத்திரமே பயன்படுத்தப்படுகின்றது . | பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (உ) | கேட்போர் கூட நிர்மாணம் மூன்று கட்டங்களில் 2010, 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் பூர்த்தி செய்வதற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதும் 2015 ஆம் ஆண்டு வரை இந்நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு இருக்கவில்லை. 2015 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை 04 ஆண்டுகளில் இக்கட்டிடங்களின் நிர்மாண நடவடிக்கைகள் நிறுத்தி வைக்கப்பட்டு இருந்ததுடன் அதனால் கட்டிடத்தில் இருந்த சேதங்களை மீண்டும் திருத்தம் செய்வதற்காக ரூபா 8,458,531 தொகை செலவிடப்பட்டிருந்தது. மேலும் 14 மாதங்கள் அதாவது 2021 ஆகஸ்ட் 31 ஆம் திகதி வரையில் எஞ்சிய வேலைகளை | தற்போதய மதியுரை நிறுவனத்தினால் கட்டமைப்பு பகுதிகளின் உறுதியை அதிகரிக்க வேண்டும் என சுட்டிக்காட்டியுள்ளது. முதலாவது கட்டத்தில் மதியுரை நிறுவனத்தினால் திட்டப் பத்திரங்களைப் பெற்றுக்கொண்டு அவர்களின் கண்காணிப்பின் நிர்மாணிக்கப்பட்ட கொங்கிரீட் பகுதிகளில் உறுதி போதிய அளவில் இல்லை என்பதால் அவற்றை உடைத்து அகற்றி மீண்டும் நிர்மாணம் | பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | பூர்த்தி செய்ய மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதும் 2024 பெப்ரவரி வரையில் வேலை பூர்த்தி செய்வதற்கு பல்கலைக்கழகத்திற்கு முடியாது இருந்தது.. இங்கு பெறுகை வழிகாட்டல் கோவையின் 5.3.11 பிரிவிற்கு முரணாக கேட்போர் கூடத்திற்காக ரூபா 5,670,000 பெறுமதியான டோர் ஸ்டீல் கொள்வனின் போது கேள்வி பாதுகாப்பு பிணை முறியொன்று பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே வழிகாட்டி கோவையின் 8.9.1 பிரிவுக்கு முரணாக ஒப்பந்த உடன்படிக்கை மேற்கொள்ளாமல் இக் கட்டிடத்திற்காக 9 சந்தர்ப்பங்களில் ரூபா 25,345,980 பெறுமதியான பெறுகைகள் மேற்கொள்ளப்பட்டு இருந்தமை தெரிவு பரிசோதனையின் போது கண்டறியப்பட்டது. | மேற்கொள்ளப்பட்டது. ரூபா 8,458,530.58 தொகை முதலாம் கட்டத்தில் வேலை தளத்தில் நிர்மாண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட தொழில்துறையாளர்களின் நிர்ணாண மேற்பார்வைக்கும் கண்காணிப்புக்கும் நிர்மாணத்தின் பலவீன மட்டத்தில் காணப்பட்டமை போன்ற காரணங்களால் இடம்பெறவில்லை என்பதாகவும் அதற்காக வேறு காரணங்கள் தாக்கமளித்துள்ளதாக சுட்டிக்காட்ட விரும்புகிறேன். | |
| (ஊ) | பெறுகை கைநூலின் 3 ஆவது அத்தியாயத்திற்கு முரணாக ரூபா 11,036,177 பெறுமதியான Sage கணக்கீட்டு மென்பொருள் கொள்வனவிற்காக சந்தை ஒப்பீட்டு விலை முறைமை பயன்படுத்தப்பட்டதால் சர்வதேச / தேசிய போட்டி கேள்வியாளர்களின் விலை விவரங்களை கோரி பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்த நன்மைகள் இழக்கப்பட்டு இருந்தது. | Sage கணக்கீட்டு மென்பொருள் முறைமை கொள்வனவு செய்யும் போது அவற்றுக்கு காணப்பட்ட அவசர தேவைப்பாட்டின் பேரிலும் இப் பல்கலைக்கழகத்தின் நிதியாளர் அலுவலகத்தில் கணக்கு பிரிவின் சம்பளம் தயாரித்தல் ஏனைய கணக்குகள் நடவடிக்கைகளுக்காக கேள்வி கோருவதற்காக சந்தை ஒப்பீட்டு முறைமை பயன்படுத்தப்பட்டது | பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (எ) | 2022 மே 9 ஆம் திகதி பெறுகை வழங்கள் கடிதத்தின் மூலம் Sage மென்பொருள் 2022 ஜூன் 25 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் நிறுவப்பட வேண்டிய போதிலும் 2024 ஜூன் மாதம் 19 ஆம் திகதி | சம்பள தயாரிப்பு மொடியுல்கள் (Payroll Module) முறையாக ஸ்தாபிக்கப்பட்ட போதும் எம்மால் மேற்கொள்ளப்பட | பெறுகை கைநூலின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் மற்றும் மென்பொருள் அனைத்து மொடியுல்களும் விரைவில் |

| | | |
|---|---|---|
| வரையிலும் சம்பள தயாரிப்பு மொடியுல்கள் தாபிக்கப்பட்டிருந்த போதும் அது செயற்பாட்டு மட்டத்தில் காணப்படவில்லை. பெறுகை வழிகாட்டி கோவையி 2.4 பிரிவின் பிரகாரம் 2022 மே 06 ஆம் திகதி நடத்தப்பட்ட தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு அறிக்கையில் ஒரு உறுப்பினர் கையொப்பம் இடாமை காரணமாக அதன் செல்லுபடிக் காலம் தொடர்பாக திருப்தி அடைய முடியாததுள்ளது. | வேண்டிய தரவு உள்ளடக்கல்கள் இடம் பெறாமல் காணப்பட்டதால் அந்த தரவுகளை உள்ளடக்கி பூர்த்தி செய்து பரீட்சிக்கப்பட்ட பின்னர் நேரடியாக செயல்பாட்டு நிலைமையில் எம்முடைய மொடியுலையும் பயன்படுத்தலாம் | பயன்பாட்டுக்கு எடுக்கப்பட வேண்டும். |